1990 மார்ச் 21]

பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று துணை வேந்தர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இங்கேயுள்ள கல்வெட்டு ஆய்வுத்துறையிலுள்ள அந்தத் துறையினைச் சேர்ந்தவர்களும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

எஸ். எஸ். எல். சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்தல்.

*5114—திரு. கே. பிச்சாண்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பிச்சாண்டி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. வரையில் மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிற காரணத்தால் இனிவரும் ஆண்டுகளிலாவது தேர்வுக் கட்டணம் ரத்து செயயப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; துணைத் தலைவர் அவர்களே, இதிலும் இப்போது தேர்வு நடத்துவது என்பது மிகப்பெரிய செலவுக்குரிய ஒரு இனமாக இருக்கிறது. ஆசிரியர்கள், அதிலே பங்குபெறுகிற பணியாளர்கள் போன்றவர்களின் ஊதியத்தை எல்லாம் அவ்வப்போது உயர்த்த வேண்டிய கட்டாயமான நிலைமை இருக்கிறது. மேலும், தேர்வு எழுதுகிறோம் என்ற உணர்வு கூட மாணவர்களுக்குக் கட்டணம் கட்டினால்தான் வருகிறது. இல்லை என்றால், தேர்வு நடைபெறுவதைக் கூட அவர்கள் மறந்து விடுவார்கள். எனவே, இவை இன்றியமையாத தேவையாக இருப்பதால் இந்தக் கட்டணத்தை நீக்குவதற்கான ஆலோசனை இல்லை.

திரு. கே. பிச்சாண்டி ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய மாணவர்களுக்காவது, இன்றைக்குப் பெண்களுக்குப் பட்டப்படிப்பு வரையில் இலவசக் கல்வி அளிக்கப்பட்டு வருகிற காரணத்தால் அவர்களுக்கும் வரும் ஆண்டிலேயிருந்தாவது இந்தத் தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசு முயற்சிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகை மிகக் குறைவான தொகை. இதைக்கூட கட்ட முடியாத நிலைமையில் யாராவது இருந்து விண்ணப்பிப்பார்களேயானால், அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. பொன்முடி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சலுகைகளை அளித்து வருகின்ற இந்த அரசினிடத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ள மாணவர்களுக்காவது இதில் சலுகை அளிக்கும் செயற்குறிப்பு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9–15 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் வறுமைக்கோடு என்ற இலக்கணத்தை வைத்துப் பார்ப்பதாக இருந்தால், எந்த ஒரு காரியத்தையும் அரசாங்கம் முறையாகச் செய்ய முடியாது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வறுமைப்பட்டவர்கள், முடியாதவர்கள் யாரேனும் விண்ணப்பம் செய்தால் அது பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆதிதிராவிட பழங்குடி மக்களுக்கு இந்தக் கட்டணத்திலிருந்து அறவே விலக்கு அளிக்கின்ற முடிவை மேற்கொள்ள வேண்டுமென்று அரசை வலியுறுத்தி அதற்காக பரிசீலனை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக ஆகக்கூடியச் செலவு இப்போது வளர்ந்துகொண்டு வருகிறது. இருந்தாலும், ஆதிதிராவிடர் சமூகத்திற்கு இந்த 15 ரூபாயினால்தான் பெரிய பாதிப்பு ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களானால், தக்க காலத்தில் பரிசீலிக்கலாம்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது ஐக்கிய நாடுகள் சபை எழுத்தறிவு ஆண்டு என அறிவித்திருக்கிறது. இன்று ''சார்க்'' நாடுகள் பெண் குழந்தைகள் ஆண்டாக அறிவித்திருக்கிறது. ஆகவே, இந்தச் சூழ்நிலையில் இந்த எஸ்.எஸ்.எல்.சி. கட்டணம் குறைந்த பட்சம் பெண்களுக்காவது ரத்து செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் உரிமையைப் பாது காக்கின்றபோது, பெண்களுடைய கடமையும் வளரும். உரிமை மட்டுமல்ல, கடமையும் இருக்கின்ற காரணத்தினால், இந்தத் தொகையைச் செலுத்தத் தயங்கமாட்டார்கள் என நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கு இணங்க வினா எண். 45 மற்றும் வினா எண். 46 தள்ளிவைக்கப்படுகின்றன.

மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகள்.

***3198 திரு. இரா. சாமிநாதன் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பெற்று மாநக ராட்சி ஏலத்தின் மூலம் வாடகை வசூலிக்கும் திட்டம் செயல் படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை மாநகராட்சி, திருப்பரங் குன்றம் சாலையில் மேயர் முத்து மேம்பாலத்தின் (தற்போது பெரியார் மேம்பாலம்) கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து 10–11–1978-ல் பொறுப்பினை எடுத்தது. அதன் பின்னர், முத்து மேம்பாலத்தின் கீழுள்ள இடைவெளி கண்களில் (Spans) கடைகள் அமைக்க 25–1–1980-ம் தேதியில் பொது ஏலம் நடத்தப்பட்டு, கடைகள் அமைக்க அனு மதியும் வழங்கப்பட்டது. ஏலம் விடப்பட்டு பொறுப்பு ஒப்ப டைத்த நாளிலிருந்து மதுரை மாநகராட்சியால் மாமன்றம் அவ்வப்போது தீர்மானிக்கும் வாடகை உயர்வுகளுடன் லைசென்ஸ்தாரரிடமிருந்து வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே போல் அதற்கு அடுத்தாற்போல் இருக்கின்ற பசும்பொன் தேவர் மேம்பலத்திற்குக் கீழே உள்ள கடைகளுக்கும் மாநகராட்சி இதே மாதிரி நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்